**களனிப் பல்கலைக்கழகம்**
**மானிடவியல் பீடம் - மொழியியல் துறை**
**மொழிபெயர்ப்பும் உரைபெயர்ப்பும் டிப்ளோமா கற்கைநெறி - 2017**

மேற்குறிப்பிட்ட கற்கை நெறிக்கான விண்ணப்பப் படிவங்களை மொழியியல் துறையில் 2017.07.31 முதல் 2017.08.25 வரை பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2016.09.01 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் உரைபெயர்ப்பாளர்களுக்குத் தேவையான அறிவையும் பயிற்சியையும் வழங்குவதே இக் கற்கை நெறியின் பிரதான நோக்கமாகும்.

**மொழிபெயர்ப்புக் கற்கைநெறி.** :-

1. தமிழ் - சிங்களம் மொழிபெயர்ப்புக் கற்கைநெறி.
   (விண்ணப்பதாரர்கள் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்)

2. ஆங்கிலம் - சிங்களம் மொழிபெயர்ப்புக் கற்கைநெறி
   (விண்ணப்பதாரர்கள் ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்)

(மேற்கூறப்பட்ட முதலாம் மற்றும் இரண்டாம் பிரிவுகளில் ஒன்றினை மட்டும் தெரிவு செய்ய முடியும்.)

**கற்கைநெறிக் காலம்.** :- ஒரு வருடம்
(சனிக்கிழமைகளில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை விரிவுரைகள் இடம்பெறும்.)

**கற்கைநெறிக் கட்டணம்.** :- ரூபா. 50,000 (ஐம்பதாயிரம்)
(முதற் தவணைக் கட்டணம் ரூபா 30,000. இரண்டாம் தவணைக் கட்டணம் 20,000 பதிவு செய்யப்பட்டு மூன்று மாதங்களுக்குள் செலுத்தப்பட வேண்டும்.)

**விண்ணப்பிப்பதற்கான ஆகக் குறைந்த தகைமைகள்.** :-
க.பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் மூன்று பாடங்களிலும் ஒரே தடவையில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு பல்கலைக்கழகப் பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்

**கற்கைநெறிக்கு தெரிவு செய்யப்படும் முறை.** :-
அனைத்து விண்ணப்பதாரர்களும் மொழியியல் துயையினரால் நடாத்தப்படும் மொழித்திறன் தகுதிகாண் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கற்கைநெறி ஆரம்பம்** :- 2017 ஒக்டோபர்

**விண்ணப்பிக்கும் முறை:**

எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் 055-1-001-1-0667549 என்ற கணக்கு இலக்கத்திற்கு ரூ.750 பணத்தைச் செலுத்தி அதற்கான பற்றும் சீட்டு மொழியியல் துறையில் சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம். கட்டணம் செலுத்தும் வரவுத் துண்டில் **"Diploma in Translation and Interpretation - 2017 (Request for application)"** எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

தபால் மூலம் விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புவோர் வங்கியில் பணம் செலுத்திய பற்றுச் சீட்டுடன் ரூ. 10.00 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்டுள்ள சுய முகவரியிடப்பட்ட கடித உறை ஒன்றை (9"x4") **"Coordinator, Diploma in Translation and Interpretation, Department of Linguistics, University of Kelaniya, Kelaniya".** எனும் முகவரிக்கு 2017.08.21 க்கு முன்னர் அனுப்பி வைப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் மேற்குறிப்பிட்ட முகவரிக்கு 2017.09.01 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"Diploma in Translation and Interpretation - 2017 "** எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்படாத மற்றும் உரிய காலத்திற்குள் கிடைக்கப்பெறாத விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.
இக்கற்கைநெறி தொடர்பான மேலதிகத் தகவல்களுக்கு, பாடநெறி இணைப்பாளர், மொழியியல் துறை, K2 - 116, களனிப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அல்லது 0112 2908786, 0112-2903671/2 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகத் தொடர்பு கொள்ளவும்.

**பதிவாளர் - களனிப் பல்கலைக்கழகம்**
**2017. 07. 24**